DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

-----------------------------------------------------------------

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.131/2019**

**P.W.1**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | சங்கர் |
| Father Name | : | ராமசாமி |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.08.2025.

(எதிரி ஆஜர். )

<u>**அரசு தரப்பில் முதல் விசாரணை :**</u>

நான் தற்போது நாமக்கல்லில் குடியிருக்கிறேன். நான் நாமக்கல்லில் சிவில் இன்ஜினியரிங் பிரிவில் சூப்பர்வைசராக பணிபுரிகிறேன். நான் சம்பவ சமயத்தில் மதுரையில் ஐஸ்வர்யா ஹெல்த் கேர் கட்டிடத்தில் சூப்பர்வைசராக வேலை பார்த்து வந்தேன். இவ்வழக்கில் இறந்து போன லால்குமார் ஷா என்பவரை எனக்கு தெரியும். எனக்கு சாட்சி எண்.3 ஹரிராம்ஷா, சாட்சி எண்.4 சந்தோஷ், சாட்சி எண்.5 தினேஷ்குமார், சாட்சி எண்.2 தீபக்குமார் ஆகியோர்கள் அந்த சமயத்தில் என்னிடத்தில் வேலை பார்த்து வந்தார்கள். அப்போது கட்டிடத்தில் ஆள்பற்றாக்குறையாக இருந்ததால் சென்னையிலிருந்து ஆட்களை கூட்டி வருவதற்காக தீபக் என்பவர் சென்னைக்கு 03.02.2018 ம் தேதியன்று சென்று வேலையாட்களை கூட்டி வருவதற்காக சென்றார். அதே தினத்தன்று இரவு சுமார் 09.30 மணியளவில் என்னிடம் வேலை செய்த ஹரேராம் என்பவர் எனக்கு போன் செய்து தீபக் என்பவர் ஹரேராம் என்பவருக்கு போன் செய்து லால்குமார் ஷா என்பவரை யாரோ இரண்டு நபர்கள் பிடித்துவிட்டதாக தகவல் சொன்னதாக என்னிடம் ஹரேராம் தெரிவித்தார். அதன்பிறகு நான் மற்றும் ஹரேரோம் ஆகியோர் தினத்தந்தி அலுவலகம் அருகிலுள்ள பாலத்திற்கு சென்று

பார்த்தோம். அங்கு லால்குமார் ஷா என்பவரை காணவில்லை. மறுபடியும் தீபக் என்பவருக்கு போன் செய்து கேட்ட போது, பாலத்தின் வலதுபக்க படிக்கட்டில் லால்குமார் ஷா என்பவர் மல்லாந்து படிக்கட்டில் ரத்தம் சிந்திய நிலையில் படுத்திருந்தார். அதன்பிறகு 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து அவர்கள் வந்து பார்த்த போது, லால்குமார் ஷா இறந்துவிட்டதாக தெரிவித்தார்கள். அதன்பிறகு லால்குமார் ஷா உடலை மதுரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். இது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான், அந்த புகார் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>** இல்லை.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.